## தசை இறுக்க நோய்க்கு

# கே.எம்.சி.எச். மருத்துவமனையில் புதிய சிகிச்சை முறை கண்டுபிடிப்பு

கோவை: கோவை மெடிக்கல் சென்டர் அண்டு ஹாஸ்பிட்டல் சார்பில் நரம்பியல் நோயான ஸ்பாஸ்டிசிட்டி (தசை நார் இறுக்க நோய்) சிகிச்சைக்கு புதிய முறை அறிமுகம் செய்யப் பட்டது.

கை, கால்களில் திடீரென விறைப்புத் தன்மை ஏற்பட்டு, கடுமையான வலியை உண்டாக் கும். நரம்புகளில் மோட்டார் நியூரான்களில் தீவிர செயல் பாட்டால், நீட்டி முறுக்கும் எதிர் விளைவால் இது உருவாகிறது. பக்கவாதம், செரிபரல் பால்சி, மோட்டார் நியூரான் கோளாறு, முகுத்தண்டில் அடிபடுதல், செர்விகல் மைலோபதி மற்றும் பரம்பரை ஸ்பாஸ்டிக் கோளாறுகள் தான் இந்த நிலையை உருவாக்குகிறது.

பல சிகிச்சைகள் இதற்கு இருந்தாலும், நரம்பியல் நிபுணர்களுக்கு சவாலான சிகிச்சை முறையாகத் தான் இந்த நோய் உள்ளது.

பேக்லோ பென் பம்ப் பொருத்துதல் இதற்கு ஒரு தீர்வாக கருதப்படுகின்றது. இந்த சிகிச்சைக்கு ஒன்று முதல் ஒன்றை மணி நேரம் தேவைப்படும். நோயாளிக்கு சாதாரண மயக்க மருந்து நிலையில், அடி வயிற்று தசைப் பகுதியில் இந்த பம்ப் பொருத்தப்படும். ஒரு ஊசி மூலம், தண்டுவட திரவத் தினுள், கழுத்தை நோக்கிச் செல்லும் வகையில், ஒரு கதீட்டர் பொருத்தப்படும். பின் இந்த கதீட்டர், தோலுக்கு அடியிலிருந்து வயிற்றுப் பகுதி யிலுள்ள பம்ப்புடன் இணைக் கப்பட்டு, மருத்துவரின் பரிந்துரைப் படி, குறிப்பிட்ட அளவு மருந்து தொடர்ச்சியாக செலுத்தப் படும் வகையில் திட்டமிடப்பட்டிருக்கும். இந்தப் பம்பினுள் மருந்தை ஆண்டுக்கொரு முறை நிரப்பினால் போதும்.

50 வயதான, சேலத்தை சேர்ந்த சங்கரன் என்பவர் கடந்த 10 ஆண்டுகளாக கால், கைகளில் ஸ்பாஸ்டிக் நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். மோட்டார் நியூரான் நோயாலும் அவதிப் பட்டார். சரியாக தூக்க மின்றியும் இருந்தார்.

கடந்த வாரம் இந்த புதிய முறை சிகிச்சையான பம்ப் பொருத்தியவுடன் நிவாரணம் பெற்றார். இந்த நவீன சிகிச்சையை, நரம்பி யல் துறை சிகிச்சை நிபுணர் டாக்டர் அருள்செல்வன் மற்றும் வருகை நரம்பியல் துறை நிபுணர் டாக்டர். ராம் நாராயணன் ஆகி யோர் மேற்கொண்டனர். கோவையில் இச்சிகிச்சை முதன் முறையாகும். இதனை பாராட்டி, மருத்துவமனையின் தலைவர் டாக்டர். நல்லா பழனிச்சாமி வாழ்த்தினார்.

இது குறித்து அவர் கூறுகையில், கே.எம்.சி.எச். மருத்துவமனை உயர்தரமான சிகிச்சைகள் மற்றும் இது போன்ற புதுமை யான மருத்துவ தொழில்நுட்பங்கள் பிரயோகிப்பதில் வல்லமையுடன் தொடர்ந்து செயல் படும்.

இதன் மூலம் பல நோயாளிகள் அரிய சிகிச்சை பெற்று பயன் பெறுவார்கள் என்றார்.